தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்க மாநாட்டின் தீர்மானங்கள்

திரு. எல். பலராமன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) தமிழ் நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் சங்கத்தினர் 31-3-1973 அன்று காஞ்சீபுரத்தில் நடத்திய மாநாட்டின் தீர்மானங்கள் அரசின் கவனத்திற்கு வந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அத்தீர்மானங்கள் என்ன ?

(உ) அவை மீது என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) & (உ) ஒரு விவர அறிக்கை@ அவையில் வைக்கப்பட்டுள்ளது.

B.T. Teachers

* 305 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have ordered in Memorandum No. 9698/L1/73, Education, dated 20th October 1973 that the B.T. Teachers working in Secondary Grade positions in Government 'B' Wing and Private High Schools should be given first preference in the appointment of 1,200 B.T. teachers in 'Half-a-million Scheme'; and

(*b*) if so, the number of teachers so far selected and appointed?

பி.டி. ஆசிரியர்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :

(அ) அரசு 'பி' பிரிவு உயர்நிலைப் பள்ளிகளிலும், தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலும் இடைநிலைத்தர ஆசிரியர்களாகப் பணியாற்றும் பி.டி. ஆசிரியர் களுக்கு, "ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தில்" 1,200 பி.டி.

@ 115–116 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1974 ஏப்ரல் 11]

ஆசிரியர்களை நியமிப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என்று கல்வித் துறையின் 20-10-1973ஆம் நாளிட்ட குறிப்பாணை எண் 9698/ LI/ 73-ல் அரசு ஆணையிட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இது வரை எத்தனை ஆசிரியர்கள் தெரிந்தெடுக்கப்பட்டு நியமிக்கப்பட்டனர் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம். ஆனால் ஒவ்வொரு நிருவாகத்துக்கும் எந்தப் பாடத்தில் பி.டி. தேர்ச்சி பெற்ற ஆசிரியர் தேவையோ அத்தகைய செகண்டரி கிரேடு பதவியிலுள்ள ஆசிரியர் அந்தப் பாடத்தில் பி.டி. தேர்ச்சி பெற்றிருந்தால் மட்டுமே அத்தகைய முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

(இ) 21.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, சில இடங்கள் காலியாக இருக்கின்றன என்றும், கல்விச் செயலாளர் அவர்கள் ஒதுக்கீட்டுத் தொகையை மனதில் கொண்டு, பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் என்ற வேறுபாடு இல்லாமல், அந்த இடங்களுக்குத் தேவையான ஆசிரியர்களைப் போட்டு நிரப்பிக் கொள்ளலாம் என்றும் கல்வி இயக்குநருக்கு குறிப்பு அனுப்பினார்களா ? அப்படியானால், கல்வி இயக்குநர் எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 9,923 இடங்கள் என்ற போது, ஹையர் கிரேடு 500, செகண்டரி கிரேடு 6,928, உடற் பயிற்சி ஆசிரியர் இரண்டாம் கிரேடு 428, கைத்தொழில் ஆசிரியர்கள் 797, பி.டி. சிறப்புப் பதவியில் பி.டி. ஆசிரியர்களுக்கு 911, முதல்நிலை தமிழ் ஆசிரியர் 279, உடற்பயிற்சி முதல் கிரேடு 5, ஆக 9,923 இடங்கள் இருந்தபோது, அதில் பி.டி. ஆசிரியர்களுக்கு 911 ஒதுக்கப்பட்டது. அந்த இடங்கள் நிரப்பப் பட்டிருக்கின்றன. அதில் ஏதாவது காலியிருந்தால், அதைப்பற்றி விவரம் தெரிந்தால், தக்க நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 10,500 இடங்களில், காலி இடங்கள் இருக்கின்றன. அவற்றை நிரப்புவதில் பட்டதாரி ஆசிரியர், இடைநிலை ஆசிரியர் என்ற வித்தியாசமில்லாமல் ஒதுக்கீட்டுத் தொகையை மனதில் கொண்டு, ஆசிரியர்களை வேலைக்கு அமர்த் தலாம் என்று கல்விச் செயலாளர் அவர்கள் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்திருந்தார். அதைப்பற்றி நடவடிக்கை என்ன எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஒதுக்கீட்டுத் தொகையை வைத்துக் கணக்கிடும்போது, 9,923 பேரை நான் சொன்ன அடிப்படையில் தான் நியமிக்க முடிகிறது. 10,000 அல்லது 10,500 என்றாலும், ஒதுக்கீட்டுத் தொகையை நான் சொன்ன அந்த வகையிலே பிரிக்கிறபோது, 9,923 பேருக்குத் தான் வருகிறது. பி.டி. ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்பட்ட 911 இடங்களில் காலியிருக்குமேயானால், அதுபற்றி கவனிக்கலாம்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, 'B' பிரிவு பள்ளிகளில் பணியாற்ற செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் பதவியில் பணியாற்றும் பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களை நியமிப்பதில், ஐந்து லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டிருக்கிறது. இதே மாதிரி செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக இருந்து தமிழ் ஆசிரியர்களாகத் தேறியிருப்பவர்களுக்கு, புதிதாக தமிழ் ஆசிரியர்கள் பதவிகளில் நியமிப்பதற்கு முன்னுரிமை வழங்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, செகண்டரி கிரேட் ஆசிரியர் பதவியில் உள்ள பட்டம் பெற்ற பி.டி. ஆசிரியர்களுக்கு எப்படி முன்னுரிமை வழங்கப்படுகிறதோ, அதைப் போல தமிழ் ஆசிரியர்களாகப் படித்திருப்பாரேயானால், அவர்களுக்கும் முன் உரிமை வழங்கப்படுமா என்பது தானே அங்கத்தினருடைய கேள்வி. அது கவனிக்கப்படும்.

திரு. எம். சங்கரலிங்கம் : தலைவரவர்களே, 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்புத் திட்டத்தில், 1,200 பி.டி. ஆசிரியர்களில், தொளாயிரத்துச் சில்லரை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 3, 4 ஆண்டுகள் தொடர்ந்து 10 (ஏ) (1) விதிப்படி வேலை பார்த்தவர்கள் இருக்கிறார்கள். 5 லட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், பி.டி. ஆசிரியர்கள் புதிதாக சிலர் நியமிக்கப்படுகிறபோது, இப்படி நான்கு ஆண்டுகள் வேலை பார்த்தவர்கள் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அப்படி கொல்லங்கோடு உயர்நிலைப்பள்ளி, இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பல பள்ளிகளிலிருந்து 25, 30 ஆசிரியர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இனிமேல் வருகிற இடங்களில் முன்னுரிமை கொடுத்து, எடுத்துக்கொள்ள அரசு ஆராயுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்த நிலைமைகள் என்ன என்று தெரியவில்லை. அதுபற்றி விளக்கங்கள் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்ற நிலைமைகள் இருக்குமேயானால், கவனிக்கலாம்.

1974 ஏப்ரல் 11]

திரு. வி. வெங்கா : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களின் கீழ் இயங்கி வரும் நடுநிலைப் பள்ளிகளில் சில தமிழ் ஆசிரியர்களையும், உடற்பயிற்சி ஆசிரியர்களையும் நியமித்துக்கொள்ளலாம் என்ற விதிமுறை இருக்கிறது. அதற்குட்பட்டு பள்ளிகளில், இன்னின்ன பள்ளிகளில் காலியிருக்கிறது, அவைகளை நியமித்துக் கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று டி.இ.ஓ.விடம் கேட்கின்றபோது, அரசிடமிருந்து உத்தரவு பெறவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த நடைமுறையைத் திருத்தி, டி.இ.ஒ. அவர்களே அங்கே உத்தரவு வழங்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதில் இருக்கிற சிக்கல் என்ன என்று எனக்குத் தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால், நிலைமைகளை அறிந்து சொல்லலாம்.

Radiation Medicine Centre

* 306 *Q.*—THIRU V. VENGA (on behalf of THIRU K. ARIVAZHAGAN): Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under consideration to start a Radiation Medicine Centre in the State?

கதிரியக்க முறை மருத்துவ நிலையம்.

திரு. வி. வெங்கா (திரு. க. அறிவழகன் சார்பில்) : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

மாநிலத்தில் கதிரியக்க முறை மருத்துவ நிலையம் ஒன்றைத் தொடங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.

Loss of Eye-sight due to lack of nutrition

* 307 *Q.*—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether it is a fact that children have lost their eye-sight due to lack of nutrition in Tamil Nadu; and

(*b*) if so, the total number of children affected?